Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



நகர் ஊரமைப்புத் துறை

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ)

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம், அவர்களின் செயல்முறை ஆணை

பிறப்பிப்பவர் : திரு. பா. ரமேஷ்குமார்,பி.இ.,எம்.பி.ஏ.,

ந.க.எண்.2333/2021/ திமா

நாள் : 24.08.2021

பொருள் : மனைப்பிரிவு- மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம், அவிநாசி வட்டம்-அவிநாசி ஊராட்சி ஒன்றியம்-வடுகபாளையம் ஊராட்சி மற்றும் கிராமம் ரீ.ச.எண். 300/1C-ல் 3.465 ஏக்கர் (14030.00ச.மீ) பரப்பளவு கொண்ட இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப அனுமதி-ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :

1. மனுதாரர் திருமதி.E பரமேஸ்வரி, திருமுருகன்பூண்டி, திருப்பூர் மாவட்டம் அவர்களின் விண்ணப்பம் பெறப்பட்ட நாள்.28.06.2021 மற்றும் 23.08.2021
2. இவ்வலுவலக கடிதம் இதே எண். நாள்.08.07.2021 (சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் அளிக்கப்பட்டது)
3. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 4367/2019/-TCP2 நாள். 14.08.2021.
4. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 19799/2020/போ நாள்.24.12.2020
5. சாலை, பூங்கா மற்றும் பொது உபயோக பகுதி(உள்ளாட்சி மற்றும் TANGEDCO) யினை உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட தான ஆவண எண்.9472/2021 நாள்.13.08.2021.
6. அரசாணை எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள். 04.06.2004
7. அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள். 04.05.2017
8. அரசாணை எண்.18. நகராட்சி நிர்வாகம் மற்றும் குழநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16. நகராட்சி நிர்வாகம் மற்றும் குழநீர் வழங்கல் துறை நாள்.31.01.2020
9. அரசாணை எண். 141, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்(UD4(3)) துறை, நாள்.23.09.2020
10. அரசாணை எண்.181 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்.09.12.2020.
11. அரசு கடிதம் எண்.19113/நவ493)/2017-1, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்.30.08.2017.
12. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 13686/2017/LA1 நாள் 08.09.2017
13. இவ்வலுவலகக் கடிதம் இதே எண். நாள்.23.08.2021 கட்டண கேட்பு வரைவு-மனுதாரருக்கு முகவரியிட்டது).
14. மனுதாரர், நன்னிலை கட்டணம் செலுத்தி பெறப்பட்ட நாள்.24.08.2021.

******

பார்வை 1 -ல் சுட்டிய கடிதத்துடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு இசைவுக்கான கோரிக்கை, பரிசிலிக்கப்பட்டு பார்வை 2 - ல் சுட்டிய இவ்வலுவலக கடிதம் நாள்.08.07.2021 மூலம் மனைப்பிரிவு பூங்கா, சாலை மற்றும் பொது உபயோக அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது. பூங்கா, சாலை மற்றும் உள்ளாட்சி மற்றும் TANGEDCO ற்கான பொது உபயோக இடத்தினை தானப்பத்திர எண். 9472/2021 நாள்.13.08.2021- ல் உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட்டு அதன் அசல் தான பத்திர ஆவண நகல் பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

...2/-

For SUBBULAKSHMI NAGAR

2. மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ./ந.ஊ.(திமா) எண். 213/2021** என எண்ணிடப்பட்டு 2 அசல் வரைபடங்கள் மேல் நடவடிக்கைகாக இத்துடன் அனுப்பிவைக்கப்படுகிறது.

3. மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்:9(ஆ) -ன் படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு, அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்மந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும், நில அளவைத் துறைக்கும், தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

5. செயலானைக் கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகைச்சான்றினை உடன் அனுப்பிவைக்குமாறும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

சிறப்பு நிபந்தனை

1. (a) பார்வை 10-ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை-8-ல் கண்ட TNCDBR-2019 விதி எண்.47 (11) ன்படியும் மாநகராட்சி/நகராட்சி பகுதி எனில் "Collecting the necessary fees including the charges for providing amenities like roads, strom water drains and street lights from the applicants". After collecting the necessary fees the final layout sketch, permit of Planning authority along with approval of Local Body shall be issued to the applicant(s) directly.

(b). மாநகராட்சி / நகராட்சி அல்லாத பகுதிகளில் "Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of planning authority along with the permit of local body to the applicant(s) directly, only after ensuring that the applicant lays tar roads, provide other amenities like storm water drains, water supply facilities by constructing required OHT provide necessary street lights etc., as per the standards specified by the Local Body".

2. (EWS) பொருளாதாரத்தால் பின்தங்கிவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் EWS மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 31.01.2020 — ன் ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

3. பார்வை 11 மற்றும் 12 - ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படவேண்டும்.

4. "The Tamilnadu Government in G.O.Ms.No.112, Housing and urban Development Department date: 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016 . The promoter has to advertise, market, book, sell or offer for sale ,or invite persions to Purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any real estate projet or part of it only after registering the real estate projet with the real estate regulatory Authority - ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

95

5. பார்வை 7 - ல் கண்டுள்ள அரசாணையின் படி திட்டமில்லா பகுதி/திட்ட பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில் விதி எண்.3 - ன் படி கூராய்வு கட்டணமாக ரூபாய்.1000/- ஐயும் மற்றும் விதி எண்-9 - ன் படி இடத்தின் சந்தை மதிப்பில் 3 % தொகையை நிலப்பயன் மாற்றக் கட்டணமாகவும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் வசூல் செய்த பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்படவேண்டும்.

துணை இயக்குநர்(பொ)
திருப்பூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருப்பூர்

24/8/21 24.8.24

இணைப்பு :
முத்திரையிடப்பட்ட வரைபடம் - 2
நிபந்தனைப்படிவம் -2
அசல் தான பத்திர ஆவண எண். 9472/2021 நாள். 13.08.2021

பெறுநர் :
ஊராட்சி தலைவர்
வடுகபாளையம் ஊராட்சி மற்றும் கிராமம்
அவிநாசி ஊராட்சி ஒன்றியம்
அவிநாசி வட்டம்
திருப்பூர் மாவட்டம்

நகல் :

1. மனுதாரர் (பத்தி ஒன்று மட்டும்)
திருமதி.E..பரமேஸ்வரி
க.எண்.1/36A தியாகி குமரன் காலனி
5 வது வீதி
அண்ணா நகர் மேற்கு
திருமுருகன்பூண்டி
திருப்பூர்-641652

2. The Chairman
Tamilnadu Real Estate Regulatory Authority
No.1A, CMDA Tower, Ist Floor
Gandhi Irwin Bridge Road
Egmore, Chennai-600008

3. இருப்பு கோப்பு (வரைபடம்-1 (ம) நிபந்தனைகள் படிவம்-1)

4. கோப்பு (வரைபடம்-1 (ம) நிபந்தனைகள் படிவம்-1)

தமிழ்நாடு அரசு
நகர் ஊரமைப்புத்துறை
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருப்பூர் மாவட்டம்.

ஊராட்சி தலைவர்
வடுகபாளையம் ஊராட்சி மற்றும் கிராமம்
அவிநாசி ஊராட்சி ஒன்றியம்
அவிநாசி மாவட்டம்
திருப்பூர் மாவட்டம்

கோப்பு எண்.2333/2021/திமா
மனைப்பிரிவு ம.வ./ந.ஊ.(திமா) எண்.213/2021

மனைப்பிரிவு நிபந்தனைகள்

1. தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள், 2019-இல் மனைப்பிரிவிற்காக விதிக்கப்பட்டுள்ள அனைத்து விதிகளும் இம்மனைப்பிரிவிற்குப் பொருந்தும். எனவே, பொருத்தமான விதிகள் அனைத்தும் பின்பற்றப்பட வேண்டும்.

2. **திருப்பூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தால்** அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்புத்துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

3. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (SPLAY) அமைக்கப்பட வேண்டும்.

4. மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளை நிறைவேற்றுதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த ஒரு மனையிலும் கட்டிம் கட்டவோ கூடாது.

5. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். மேலும் மனை உபயோகம் மாற்றம் கோரும் இடங்களில் மட்டுமே Tamil Nadu Combined Development Building Rule 2019-ல் குறிப்பிட்டுள்ள Resident Use-ல் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்பு துறையின் முன் அனுமதி பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் அனுமதிக்கப்பட வேண்டும்.

6. மனைப்பிரிவின் ஊடே குறைந்த அழுத்த, உயர் அழுத்த மின் கம்பிப் பாதை, தந்திக் கம்பிப்பாதை அமைந்தால், கம்பிப்பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும்.

99

7. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

8. 7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லா தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் வளர்க்கப்பட வேண்டும்.

9. மனுதாரர் மனைப்பிரிவிற்கு தொடர்புடைய **தலைவர், வடுகபாளையம் ஊராட்சி மற்றும் கிராமம்** அவர்களிடமிருந்து ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் நகர் ஊரமைப்புத்துறை மற்றும் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற வேண்டும்.

10 (அ) மேற்படி மனைப்பிரிவிற்கு **திருப்பூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தால்** தொழில்நுட்ப அனுமதி மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால் மனைப்பிரிவிற்கான இட உரிமை தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

(ஆ) மேற்படி மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும்போது அங்கீகார நிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும். இதில் பொது திறவிடங்கள் உள்ளாட்சியிடம் ஒப்படைத்ததற்கான சான்றும் இணைக்கப்பட வேண்டும்.

11 மனுதாரர், **தலைவர், வடுகபாளையம் ஊராட்சி மற்றும் கிராமம் அவர்**களிடமிருந்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'x4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்காகவும் மேலும் மனைப்பிரிவுஅங்கீகரித்த மன்றத் தீர்மான எண்ணும் நாளும் தெளிவாக குறிப்பிட்டு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

12 மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமை குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே, உண்மையில் நில உரிமம் இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

13 நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவுப்புமின்றி நகர் ஊரமைப்புத்துறையால் ரத்து செய்யப்படும்.

14 விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு. நகர் ஊரமைப்புத்துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

15 தள பரப்பு குறியீடு எண் (FSI) TNCDBR 2019-ன்படி அனுமதிக்கலாம்.

16 கோவில், தேவாலயம், மசூதி ஆகியவற்றிற்காக ஒதுக்கப்பட்டிருந்தால், அம்மனைகளை வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

17 தமிழ்நாடு நகர்புற நில உச்சவரம்பு சட்டம் 1978 நடைமுறையில் உள்ள இடத்தில் அமைந்தால் மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட விபரத்தினை தொடர்புடைய உச்சவரம்புச் சட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்தல் வேண்டும்.

18 1894-ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டப்பிரிவு 4 மற்றும் நில உச்சவரம்பு சட்டம் 1978 மற்றும் நிலச் சீர்திருத்தச் சட்டம் 1961 தொடர்பாக மனுதாரர் அளித்த உறுதிமொழியின் பேரில் மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. எனவே, இம்மனைப்பிரிவிற்கான நிலம் மேற்படி சட்டங்களின் நடவடிக்கைகளுக்கு உட்படின், அதற்கு மனுதாரரே பொறுப்பாவார்.

19 மேலும், மேற்படி சட்டங்களின்படி நில ஆர்ஜிதம் சம்பந்தமாக நில ஆர்ஜிதப்பட்டியல் (Land Plan Schedule) எதுவும் பரிசீலனைக்குப் பெறப்படவில்லை என்பதை உறுதி செய்து மன நிறைவு அடைந்த பின்னரே, மனைப்பிரிவிற்கு **தலைவர், வடுகபாளையம் ஊராட்சி மற்றும் கிராமம் அவர்களால்** ஒப்புதல் அளித்து அங்கீகாரம் வழங்கும்படி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

20 உள்ளாட்சி அதிகாரியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் ஒன்றும் நிபந்தனை படிவம் ஒன்றும் சம்பந்தப்பட்ட பதிவுத் துறை அலுவலருக்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்குமாறு உள்ளாட்சி அதிகாரியை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

அங்கீகரிக்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு ம.வ/ந.ஊ.(திமா) எண். 213/2021-ன் ஒதுக்கீடு விபரம்

திருப்பூர் மாவட்டம், அவிநாசி வட்டம்- வடுகபாளையம் ஊராட்சி மற்றும் கிராமம் க.ச.எண்.300/1C ல் 3.4650 ஏக்கர் (14030.00ச.மீ)

		பரப்பளவு	விழுக்காடு
மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு	:	3.465 ஏக்கர் (14030.00ச.மீ)	
கோரிய மனைகள்		79Nos.	
ஒதுக்கிய மனைகள்	:	66 Nos. (EWS -18 மனைகள் உட்பட)	
பொது ஒதுக்கீடு : மனுதாரரால் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை			
மனைப்பிரிவு சாலைகள் மற்றும் மூலை முடுக்குகள் பரப்பு	:	4263.73 ச.மீ	
சாலை நீங்கலாக பரப்பளவு	:	9766.20 ச.மீ	
10% பூங்கா பரப்பு	:	990.01 ச.மீ	10.13%
உள்ளாட்சிக்கான பொது உபயோகம் பரப்பு	:	53.34 ச.மீ	0.54%
விற்பனைக்குரியவை			
EWS மனைகள் (மனை எண்கள்.23-27, 29, 28, 35-41, 44-47)	:	18 Nos 989.77 ச.மீ	10.13%
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழகத்திற்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை			
மின்பகிர்மான பரப்பு (TANGEDCO)	:	50.11 ச.மீ	0.51%

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருப்பூர் மாவட்டம்.

24/8/21 24.8.21

வடுகபாளையம் ஊராட்சி மன்ற செயல் அலுவலர் / தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை திரு.N.சுப்ரமணியன்

அ.க.எண். 03/2021-2022 நாள் : 30/10/2021

பொருள் மனைப்பிரிவு அங்கீகாரம் திருப்பூர் மாவட்டம்- அவினாசி வட்டம்- அவினாசி ஊராட்சி ஒன்றியம்- வடுகபாளையம் ஊராட்சி வடுகபாளையம் கிராமம் க.ச.எண்.300/1C-ல் 3.46.1/2 ஏக்கர் பரப்பில் அமையும் உச்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வரப்பெற்றது மனைப்பிரிவிற்கு வரைபட அங்கீகாரம் மற்றும் இறுதி ஒப்பதல் வழங்குதல்- தொடர்பாக -

பார்வை
1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திருப்பூர் மாவட்டம், அவர்களின் ந.க.எண்.2333/2021 தி.மா நாள்:08.07.2021
2. அரசாணை நிலை எண். 79 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை ந.வ. 4(3) நாள்: 04.05.2017
3. வடுகபாளையம் ஊராட்சி பொது நிதி கணக்கில் பல்வகை ரசீது எண். 53333 மற்றும் 53334 நாள். 29.10.2021
4. செயல் அலுவலர்/ தலைவர் வடுகபாளையம் ஊராட்சி கடிதம் ந.க.எண். நாள் : / / 2021
5. வடுகபாளையம் ஊராட்சி மன்ற தீர்மான எண். 56 நாள் 23/9/2021

.....

உத்தரவு

பார்வை 1-ல் காணும் திருப்பூர் மாவட்டம் நகர் ஊராமைப்பு துணை இயக்குநர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு திருப்பூர் மாவட்டம், அவினாசி வட்டம், வடுபாளையம் ஊராட்சி மற்றும் கிராமம் ரீ.சர்வே எண்.300/1C-க்கு பு.ஏ.3.46,1/2 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள உத்தேச மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட உத்தேச மனைப்பிரிவிற்கு மா.வநஊ(தி.மா) எண் 213/2021 நாள் 24.08.2021 எண்ணிடப்பட்டுள்ளது.

மனைப்பிரிவு-க்குரிய மொத்தப்பரப்பளவு : பு.ஏ.3.46.1/2 (அ) 14030 ச.மீ

சாலை பொது உபயோகம், பூங்கா மற்றும் மின் வாரியத்துக்கு ஒதுக்கப்பட்ட பரப்பு (அவினாசி சார்பு அதானப் பதிவு ஆவண எண். 9472/2021 நாள் 13.08.2021-ன் படி வடுகபாளையம் பஞ்சாயத்துக்கு ஒப்படைக்கப்பட்ட பரப்பு) 5357.19 ச.மீ

நிகர மனையிடத்தின் பரப்பு ---------- 8672.81 ச. மீ

For SUBBULAKSHMI NAGAR

Authorised Signatory

வடுகபாளையம் ஊராட்சி பொது நிதி கணக்கில் செலுத்தப்பட்ட கணக்கீடு விபரம்

105

(40 ஏர்ஸ், 50 சதுர மீட்டர் பரப்பு = 1 சென்ட் என்றதின் அடிப்படையில்)
8672.81 ச.மீ – 40.5 ச.மீ = 214.14 சென்ட் (அ) 2.14 ஏக்கர்
1. சென்ட் இடத்திற்கு செலுத்தவேண்டிய வளர்ச்சி கட்டணம்
ரூ. 1000-ம் பேரில் 214.14 சென்ட் இடத்திற்கு
செலுத்தப்பட்ட வளர்ச்சி கட்டணம் (214.14 X 1000) ரூ.2,14,140.00

செலுத்திய ஆய்வு கட்டணம் ..... ரூ. 5,000.00

ஆக மொத்தம் வடுகபாளையம் ஊராட்சிக்கு செலுத்திய கட்டணம் ரூ.2,19,140.00

மேலும் பார்வை 1 ல் காணும் கடிடத்தில் தெரிவித்துள்ள ஆணையின் படியும் பஞ்சாயத்து தீர்மானப்படியும் மேற்படி இடத்திற்கு வழிகாட்டி சந்தை மதிப்பில் 3 % தொகையை நிலப்பயன் மாற்றத் தொகையாக ரூ.22512- யை பஞ்சாயத்து அரசு கருவூகை கணக்கில் பார்வை 3 ல் காணும் வங்கியில் (0217- 60-800 AS – 2790) செக் எண்: 70511 ன்படி 20.09.2021 – ம் நாள் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே கீழ்கண்டுள்ள நிபந்தனைக்கு உட்பட்டு வரைபட அங்கீகாரம் மற்றும் மனைப்பிரிவு அனுமதி வழங்கி ஆணையிடப்படுகிறது.

நிபந்தனைகள்


1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திருப்பூர் மாவட்டம் அவர்களின் நடவடிக்கைகளின் வழங்கப்பட்ட ம.வ.நஊ(திமா) எண்: 213/2021 நாள் 24.08.2021 –ல் குறிப்பிட்டுள்ளவாறு எல்லை கற்கல் வரையறுக்கப்பட வேண்டும்.
2. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திருப்பூர் மாவட்டம் அவர்களின் மனைப்பிரிவு ந.க.எண்.2333/2021 திமா நாள்: 24.08.2021 நிபந்தனைகளின் படியும் அனைத்து நிபந்தனைகளையும் ஏற்றுக்கொண்டு நிபந்தனைகளையும் ஏற்றுக்கொண்டு நிபந்தனைகளுக்கு உட்படுவதாக எழுத்து மூலமாக ரூ.20/- ரூபாய் ஒப்பந்த பத்திரத்தில் (ஸ்டாம்ப் பேப்பரில்) எழுதிக்கொடுக்க வேண்டும்

இணைப்பு:
திருப்பூர் மாவட்டம் துணை இயக்குநர் அவர்களின் நடவடிக்கைகளின் அசல் கடிதம், நிபந்தனைகள் மற்றும் மனைப்பிரிவு வரைபடம் ம.வ..ந.ஊ.(திமா) எண்: 213/2021 நாள்: 24.08.2021 மனைப்பிரிவு நிபந்தனைகள் கோப்பு எண்: 2333/2021 திமா நாள்: 24.08.2021

தலைவர்
வடுகபாளையம் ஊராட்சி

பெறுநர்:
திருமதி. E .பரமேஸ்வரி
க.எண்: 1/36 A தியாகி குமரன் காலனி
5 வது வீதி, அண்ணாநகர் மேற்கு,
திருமுருகன் பூண்டி போஸ்ட், திருப்பூர் 641652

நகல்: 1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திருப்பூர் மாவட்டம்,
3. சார்பதிவாளர் ,சார்பதிவாளர் அலுவலகம், அவினாசி.



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals


Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate